


# பேனா முனை...




கலீஃபாக்கள், மன்னர்கள் காலத்து சம்பவங்கள், இந்தியாவில் முஸ்லிம்கள் ஆட்சி, இந்திய சுதந்திர போராட்ட நிகழ்வுகள், பாலைவன சிங்கம் உமர் முக்தாரின் அதிரடிகள், ஹிட்லர் முசோலினியின் அராஜகங்கள், பாபரி மஸ்ஜித் இடிப்பு, குஜராத் இனப்படுகொலைகள் இவைகள் குறித்து நாம் தெரிந்து வைத்துள்ளோம். ஆனால் எப்படி தெரிந்து கொண்டோம்?

மனித குல விடுதலைக்கு அகிலத்தின் அருட்கொடையாய் அனுப்பப்பட்ட நபி (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையையும் அவர்கள் வாழ்வில் இடம் பெற்ற சம்பவங்களையும் நாம் அறிந்து வைத்துள்ளோம். எப்படி? நிச்சயம் ஏதேனும் புத்தகங்கள் மூலமே இவை அனைத்தையும் நாம் அறிந்து வைத்துள்ளோம். கடந்த கால நிகழ்வுகளை நமக்கு விளக்கும் ஆசான்களாக புத்தகங்கள் திகழ்கின்றன. அத்துடன் நமது நிகழ்காலத்தை செவ்வையாக்கி எதிர்காலத்தை வடிவமைக்கின்றன.

மனிதனை விலங்குகளிடமிருந்து பிரித்துக் காட்டுவது பகுத்தறிவு. இந்த பகுத்தறியும் திறனை மனிதன் பெறுவதற்கு அவனுக்கு

வாசிப்பு மிகவும் அவசியம். சாதாரண அன்றாட விஷயங்களை அறிவதில் தொடங்கி பழம்பெரும் வரலாறுகளையும், பிரமிப்பூட்டும் விஞ்ஞான உண்மைகளையும் தூர தேசத்தில் நடைபெறும் நிகழ்வுகளையும் அறிந்து கொள்வதற்கு வாசிப்பு இன்றியமையாதது.

வாசிப்பின் தாக்கத்தை அறிந்தவர்கள் அதனை தங்கள் வாழ்வின் ஓர் அங்கமாகவே பாவித்து வருவதை நாம் கண்டு வருகிறோம். புத்தகங்களை தங்கள் வாழ்வின் மிகப்பெரும் பொக்கிஷங்களாக அவர்கள் பாதுகாத்து வருகின்றனர். சென்னை பெருவெள்ளத்தில் தங்களின் உடமைகளை பலவற்றை பறிகொடுத்த போதும் தாங்கள் சேமித்து வைத்த புத்தகங்களை பறிகொடுத்ததையே மிகப்பெரும் இழப்பாக கருதியவர்களை நாம் கண்டோம். ஏனெனில் இந்த புத்தகத்தின் மூலம் அவர்கள் பெற்ற பலன்கள் ஏராளம். பறிகொடுத்த ஏனைய பொருட்கள் அனைத்தையும் மீண்டும் எளிதில் வாங்கி விடலாம். ஆனால் பழம்பெரும் பொக்கிஷங்களான அரிய புத்தகங்களை எங்கே சென்று வாங்குவது?

புத்தகங்கள் ஒரு சமுதாயத்தை பண்படுத்துபவை. புத்தகங்களை ஒரு சமுதாயத்திடமிருந்து நீக்கி விட்டால் அச்சமுதாயத்தை மிக எளிதில் வெற்றி கொள்ளலாம். அழித்து விடலாம். இதனால்தான் அன்று முதல் இன்று வரை நாடுகளின் மீது படையெடுப்பவர்கள் அந்நாட்டின் மிகப்பெரும் செல்வங்களான புத்தகங்ளை முற்றிலும் அழிப்பதை தங்கள் முதல் இலக்காக கொண்டு செயல்படுவதை நாம் கண்டு வருகிறோம்.

புத்தகத்தின் மீது போர் தொடுத்த மங்கோலிய தார்த்தாரியர்கள் அங்கு வசித்த மக்களை அழிப்பதை விட அங்கிருந்த மிகப்பெரும் நூலகமான பைத்துல் ஹிக்மாவை அழிப்பதில்தான் கவனமாக இருந்தனர் என்பதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது. அந்நூலகத்தின் நூல்களை எல்லாம் யூப்ரடிஸ் நதியில் தூக்கி வீசியதின் காரணமாக அந்நதியே நிறம் மாறி பல நாட்கள் கருப்பு வண்ணத்தில் ஓடியதாக வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளனர்.

சில வருடங்களுக்கு முன் ஈரான் மீது போர் தொடுத்த அமெரிக்க

படைகள், அங்கிருந்த புகழ்பெற்ற பாக்தாத் நூலகத்தைத்தான் முதலில் அழித்தனர். அம்மக்கள் மீண்டும் எழுச்சி பெற்று தங்கள் வாழ்க்கையை புதிதாக அமைத்துக் கொள்ள இந்த புத்தகங்கள் உதவும் என்ற காரணத்தினாலே அதனை தடுப்பதற்கே இவர்கள் புத்தகங்களை முதலில் அழிக்கிறார்கள். சக்தி வாய்ந்த ஆயுதங்களை விட வலிமையான ஆயுதங்களாக திகழ்பவை புத்தகங்கள். அதனால்தான் புத்தகங்களை எழுதியதற்காகவும் புத்தகங்களை வாசித்ததற்காகவும் மரண தண்டனை கூட விதிக்கப்பட்டதை வரலாறுகளில் நாம் கண்டு வருகிறோம்.

வாசிப்பிற்கு இஸ்லாம் அதிகளவு முக்கியத்துவத்தை கொடுத்துள்ளது. சிந்திப்பதற்கு முழு சுதந்திரத்தை அளித்து அதனை வலியுறுத்தும் ஒரு மார்க்கம் வாசிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்ததில் ஆச்சரியம் ஏதும் இல்லை. அறிந்தவர்களும், அறியாதவர்களும் சமமாவார்களா? என்று கேள்வி எழுப்புகிறது குர்ஆன். வாசிக்கத் தூண்டும் வார்த்தை பிரயோகமே குர்ஆனின் முதல் வசனம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். படிப்பினைக்காக நேர்வழி பெறுமாறு மனித குலத்திற்கு அறைகூவல் விடுக்கிறது. ‘சிந்திக்காதே, கண்ணை மூடி சொல்வதை கேள்’ என்று கூறும் மதங்களுக்கு மத்தியில் சிந்திக்கச் சொல்லும் மார்க்கம் இஸ்லாம்.

இஸ்லாத்தின் இந்த தாக்கத்தின் காரணமாக இந்த தூண்டுதலின் காரணமாகத்தான் முஸ்லிம்கள் தங்கள் அறிவை விருத்தி செய்தார்கள். அரிய கண்டுபிடிப்புகளை கண்டார்கள் என்றால் அது மிகையல்ல. இதற்கு அவர்களுக்கு பெரிதும் துணை நின்றது வாசிப்பு. குர்ஆனையும் நபி மொழியையும் பாதுகாப்பதிலும், திரட்டுவதிலும் தொடங்கிய இந்த வழக்கம் முஸ்லிம்களிடம் தொடர்ந்தது. அப்பாசிய, உஸ்மானிய சாம்ராஜ்யங்களின் ஆட்சியின் போது மிகப்பெரும் நூலகங்கள் அமைக்கப்பட்டு அவை மக்களின் அறிவு வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றின. இன்று அனைத்து துறைகளிலும் முன்னேறியதாக கூறப்படும் ஐரோப்பிய கண்டம் அன்று இந்த அறிவு அனைத்தையும் பெற்றது இஸ்லாமிய உலகிடமிருந்து என்பதை அவர்களே மறுக்கமாட்டார்கள்.

அரபு, பாரசீக மொழிகளில் இருந்த அறிவுக் கண்ணை திறந்த அத்தனை நூல்களையும் தங்கள் மொழிகளுக்கு மொழி பெயர்த்து தங்கள் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவற்றை பயன்படுத்தினர்.

ஐரோப்பாவின் இல்லங்களும், அரண்மனைகளிலும் கேளிக்கைகளிலும் மூடப்பழக்க வழக்கங்களிலும் மூழ்கி இருந்த போது முஸ்லிம் உலகில் உள்ள வீடுகளில் புத்தகங்கள் நிறைந்திருந்தன.

அன்று உலகிற்கே வழிகாட்டிய முஸ்லிம்களின் இன்றைய நிலை எப்படி இருக்கிறது? என்றைக்கு இந்த சமுதாயம் வாசிப்பு வழக்கத்தை விட்டொழித்ததோ அறிவை வளர்த்துக் கொள்வதில் அலட்சியமாக இருந்ததோ அன்றிலிருந்து அதன் வீழ்ச்சி ஆரம்பமானது. முஸ்லிம் உலகின் நூலகங்களில் இருந்து உலகின் அனைத்து பகுதி மக்களும் பயனடைந்தனர். ஆனால் அதனை தங்களிடமே வைத்திருந்த முஸ்லிம்கள் அதன் உண்மையையும், சிறப்பையும், அவசியத்தையும் உணராதவர்களாக இருந்தனர்.

இன்று கூட உயரமான கட்டிடங்களையும், ஆடம்பர மாளிகைகளையும் கட்டுவதில் போட்டு போட்டு அதில் பெருமை அடிக்கும் முஸ்லிம் உலகம் அறிவின் வளர்ச்சிக்கு என்ன செய்தது? என்று கேள்வி எழுப்பினால் அதற்கு பதில் அளிப்பது கடினமாகத்தான் இருக்கும். அறிவுப் பொக்கிஷங்களை எல்லாம் தேக்கி வைத்த நூலகங்களை பெற்றிருந்த முஸ்லிம் உலகில் இன்று அத்தகைய நூலகங்கள் உள்ளனவா? விரல்விட்டு எண்ணி விடலாம். மக்கள் வாசித்து முன்னேற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஊரிலும் அரசாங்கம் நூலகங்களை அமைத்து வைத்துள்ளதே. அந்த நூலகங்களை பயன்படுத்துபவர்கள் எத்தனை பேர்?

பொருளாதாரம் மட்டுமே போதும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்ட முஸ்லிம் உலகம் இன்று போதிய அறிவில்லாத காரணத்தினால் அந்த பொருளாதாரத்தை பாதுகாப்பதற்கு கூட வழி தெரியாமல் சிக்கித் திணறுவதை கண்கூடாக கண்டு வருகிறோம்.

வாசிப்பு வழக்கம் இன்று வெகுவாக குறைந்து வருகிறது. அதிலும் நமது சமூகத்தில் அது மிக மோசமான நிலையில் உள்ளது. வாசிப்பு

வழக்கம் இல்லாத ஒரு தலைமுறை உருவாகுவது சமூகத்திற்கு அழகல்ல. வீட்டிற்கு ஒரு நூலகம் இருந்த காலங்கள் எல்லாம் இன்று மலையேறிவிட்டன. ஃபேஸ்புக்கில் வரும் செய்திகளை தெரிந்து கொண்டால் போதும்; தான் மிகப்பெரும் அறிவாளி என்று நினைக்கும் ஒரு தலைமுறை இன்று உருவாகிவிட்டது. இது மிகவும் ஆபத்தான ஒரு நிலை. புத்தக வாசிப்பை முற்றிலுமாக மழுங்கடித்ததில் இந்த சமூக வலைதளங்களுக்கு முக்கிய பங்குள்ளன. முழு தினத்தையும் அதிலேயே செலவு செய்பவர்களுக்கு வாசிக்க எங்கே நேரம் இருக்கிறது?

இன்றைய உலகின் மிகப்பெரும் ஆயுதம் அறிவு என்பதை நாம் அறிவோம். அறிவை பெறுவதற்கு வாசிப்பு மிக அவசியம். வாசிப்பு இருந்தால்தான் ஒரு செய்தியை, தகவலை நம்மால் ஆணித்தரமாக உறுதியாக கூற முடியும். நம் தரப்பு வாதங்களை தெளிவாக முன்வைக்க முடியும். ஆனால் இன்று வாசிப்பு இல்லாத காரணத்தினால் ஒரு விஷயத்தை குறித்த அறிவு இல்லாத காரணத்தினால் பல இடங்களிலும் நமது சமுதாயத்தை சேர்ந்தவர்கள் அவமானப்படுவதை நம்மால் காண முடிகிறது. எதிர் அணியினர் வைக்கும் கேள்விகளுக்கு முறையாக பதில் சொல்லத் தெரியாமல் திணறுவதை காண முடிகிறது. போதிய அறிவு இல்லாத காரணத்தினால் அவர்களின் கருத்துக்களுக்கு எதிர் கருத்து சொல்ல முடியாமல் அவர்கள் மீது வசைமாறி பொழிகிறோம். இதன் மூலம் நமது அறியாமையை வெளிச்சம் போட்டு காட்டுகிறோம்.

பொதுவான வாசிப்பு ஒரு புறம் இருக்கட்டும். இன்று இஸ்லாத்தை குறித்தே நாம் வாசிக்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. இஸ்லாம் குறித்தும், இஸ்லாமிய சட்டங்கள் குறித்தும், வணக்க வழிபாடுகள் குறித்தும், இஸ்லாமிய வரலாறு குறித்தும் நம்மிடம் யாரேனும் கேட்டால் அதற்கு தெளிவான பதிலை நம்மால் கூற இயலுமா? ஆனால் 'நாங்கள்தான் பரம்பரை முஸ்லிம்கள்' என்று பெருமை பேசிக் கொள்கிறோம். இஸ்லாமிய பதங்கள் குறித்து, உதாரணமாக 'ஜிஹாத்' குறித்து யாரேனும் தவறாக கூறிவிட்டால் நாம் கொதி நிலைக்கு செல்கிறோம். ஆனால் அந்த வார்த்தைக்கு சரியான விளக்கத்தை நம்மால் கொடுக்க இயலுமா? இத்தனை வருட முஸ்லிம் வாழ்க்கையில் இஸ்லாத்தின் அடிப்படைகள் கூட நாம் வாசித்து அறியவில்லை

என்பதுதான் கசப்பான உண்மை.

இன்று ஊடகங்களில் முஸ்லிம்களுக்கெதிராக வரும் செய்திகளை தினமும் கண்டு நாம் அங்கலாய்க்கிறோம். ‘இதற்கு எதிராக நாம் களமாட வேண்டும். நமக்கென்று ஒரு ஊடகம் வேண்டும்’ என்று ஆக்ரோஷமாக அனைவரும் பேசுகிறோம். ஆனால் இருக்கும் ஊடகங்களை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம். முஸ்லிம்கள் நடத்தும் எத்தனை பத்திரிக்கைகளை நாம் வாசிக்கிறோம்? உடனே அதற்கு ஏதாவது காரணத்தை சொல்லி நம் தரப்பு வாதத்தை, நாம் வாசிக்காமல் இருப்பதற்கான காரணத்தை நியாயப்படுத்த பார்க்கிறோம். எத்தனை காரணங்கள் கூறினாலும் நியாயப்படுத்த முடியாத குற்றம் இது.

அரிய பல தகவல்களை சமுதாயத்திற்கு அவசியமான செய்திகளை வழங்கும் முஸ்லிம் பத்திரிக்கைகள் இன்றும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. உண்மையை உரைக்கும் காரணத்தினால் பல தடைகளை தாண்டியே இப்பத்திரிக்கைகள் நடத்தப்படுகின்றன. ஒரு செய்தியை நம்மிடம் வந்து சேர்ப்பதற்கு அவர்கள் பல முயற்சிகளை மேற்கொள்கின்றனர். ஆனால் அவற்றை படிப்பது யார்? முஸ்லிம்கள் மட்டுமின்றி முஸ்லிம் அல்லாத பலரும் நடத்தும் பத்திரிக்கைகளும் இந்த பணியை செய்து வருகின்றன. ஆனால் யாருக்காக அவர்கள் இந்த செய்திகளை அரும்பாடுபட்டு வருகிறார்களோ அவர்களே அவற்றை படிக்கவில்லையென்றால் அதனால் என்ன பிரயோஜனம்?

ஊடக துறையில் வானத்தை தொட வேண்டும். நமக்கென்று ஒரு நாளிதழ் வேண்டும். நமக்கென்று ஒரு சேனல் வேண்டும் என்று தினமும் பேசி வருகிறோம். ஆனால் தொடர்ந்து பத்திரிக்கை நடத்த முடியாமல் எத்தனை முஸ்லிம் பத்திரிக்கைகளுக்கு மூடுவிழா நடத்தப்படுகிறது என்பதை நாமறிவோமா? இவர்களின் மூடுவிழாவிற்கு நம்மிடம் இல்லாத வாசிப்பு பழக்கம் ஒரு முக்கிய காரணம் என்பதை நம்மால் மறுக்க முடியுமா?

‘வரலாறு தெரியாத சமூகத்தால் வரலாறு படைக்க முடியாது’ என்பது அறிஞர் மால்கம் எக்ஸ்-ன் பொன் மொழி. நாம் வரலாறு படைக்க வேண்டுமென்றால் முந்தைய வரலாறுகளை அறிந்திருக்க

வேண்டும். அதற்கு வாசிப்பு மிக அவசியம். புதிய புதிய கண்டுபிடிப்புகளை கண்டு பிடித்து வெற்றிப் பாதையில் நாம் முன்னேறிச் செல்ல நமக்கு வாசிப்பு அவசியம். எதிரிகளை விட நாம் ஒரு படி முன்னே செல்வதற்கும் நமக்கு அறிவு அவசியம். அதற்கும் வாசிப்பு அவசியம். இப்படி எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அதற்கு அவசியமாக இருப்பது வாசிப்பு. வாசிப்பு மனிதனின் சுவாசிப்பாக மாற வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே அவன் தன்னை பகுத்தறிவு கொண்டவன் என்று கூற முடியும்.

'கண்டதையும் படி, பண்டிதன் ஆவாய்' என்று ஒரு பழமொழி கூறுவார்கள். நாம் கண்டதையும் படிக்காவிட்டாலும் கூட தேர்ந்தெடுத்தாவது வாசிப்போம். இந்த உலகிற்கும் மறு உலகிற்கும் பயன்தரும் புத்தகங்களை வாசிப்போம். முஸ்லிம் பத்திரிக்கைகள் மற்றும் நூல்களை தேர்ந்தெடுத்து வாசிப்போம். இதன் மூலம் நாமும் முன்னேற்றம் அடையலாம். நமது அடுத்தடுத்த தலைமுறைகளும் முன்னேற்றம் அடையலாம்.